11th March 1966]

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்த மாடுகள் நல்ல பால் கொடுக்கிற மாடுகள்தான். வமிச அபிவிருத்தி அதிகமாக ஏற்படுகிறது.

### அரசாங்க மருத்துவ மனைகள்

*248 கேள்வி.—**திரு. பி. முருகையன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு வேறொரு கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமென்ன?

(உ) மேற்படி வேலை எப்போது தொடங்கப்படும்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) முதல் (உ) வரை; ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கட்டடத் திட்டம் 1967-68-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசனை செய்யப்படும்.

*249 கேள்வி.—**திரு. சி. சிவசுப்பிரமணியன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க பெரிய ஹாஸ்பிட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையிலுள்ளது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) & (இ) சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய இடத்தில் புதுக் கட்டடம் கட்டுவது 1966-67-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றுதல்

*250 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, நெல்லிக்குப்பம் ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) & (இ) ஆம். நெல்லிக்குப்பம், பன்னுருட்டி பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த இரண்டு நகரங்களும் முனிசி பாலிடிகளாக ஏப்ரல் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமா ? அல்லது, அக்டோபர் மாதத்தில்தான் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத் தின் உத்தேசமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்ஜெக்ஷன்களுக்கு ஆறு வார காலம் தேவைப்படுகிறது சட்டப்படி. ஆகவே, ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, புதிய நகராட்சிகள் திறக்கும்பொழுது அங்கேயுள்ள பொறுப்பானவர்கள் வரிபோடுவ திலே சில தவறுகள் இழைக்கிறார்கள். இதை உடனடியாகப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஸ்பெசிஃபிக்காக சம்பந்தப்பட்ட தகவல்களைத் தெரிவித்தால் வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

பள்ளி ஆசிரியர்கள்

* 251 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :**<br>**திரு. செ. மாதவன் :** } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள், பள்ளிப் பணியாளர்கள் ஊதியத்தை ஒழுங்குபடுத்த கல்வி இலாகா சமீபத்தில் புதிய உத்தரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) அரசாங்கம் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளது—

(1) அரசாங்கச் சம்பள விதங்களின் அடிப்படையில் கல்வித் துறை நிச்சயித்து அங்கீகரித்துள்ள சம்பள விதங்கள் அப்படியே நீடிக்க வேண்டும் ;

(2) ஆசிரியர்கள் 1964 மார்ச் மாதச் சம்பளமாக மொத்தம் எவ்வளவு ஊதியம் பெற்றார்களோ அதில் குறைவு எதுவும் ஏற்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் ;

(3) அவர்கள் வாங்கி வந்த சம்பள விதத்தின் அடிப்படை யில் 1964 மார்ச் மாதத்திற்குரிய அவர்களுடைய மொத்த ஊதியத் திற்கும் அங்கிகரிக்கப்பட்ட சம்பள விதப்படி 1964 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அவர்களுக்குச் சேர வேண்டிய மொத்த ஊதியத்திற் கும் உள்ள வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் அவருக்கு கொடுக்கப்படுகிற சம்பளமாகக் கருதி அவருக்குக் கொடுத்துவர வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சம்பள விதங்களில் பிற்பட்டு அவர் பெறும் சம்பள உயர்வுகளில் மேற்சொன்ன தனிச் சம்பளம் இணைத்துவிட வேண்டும்.

(4) 1960-ம் ஆண்டு சம்பளக் கமிஷனின் பரிவுரைப்படி குறைந்த அளவு உயர்வுத் தொகையான 5 ரூபாய், அரசாங்க மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில், பணியாற்றும் பணியாட் கள் அனைவருக்கும் 1-4-1964-ம் தேதி முதற்கொண்டே வழங்கப்பட வேண்டும்.